# Australian Tamil Congress

## A Unified Voice for All Tamils

# அவுஸ்திரேலியத் தமிழர் பேரவையின் 2009ம் ஆண்டு அறிக்கையின் சாரம்

**(உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்**

**துச்சமென்று தள்ளிவிட்டுத் துயர் துடைக்கும் பேரவை)**

ஆகஸ்ட் மாதம் தொடங்கிய எம் பேரவையின் பல உறுப்பினர்களின் தளரா உழைப்பால் இக் குறுகிய காலத்தில் புதிய முனைகளில் எம் நோக்கங்களைப் பேரவையால் எடுத்துச் செல்ல முடிந்தது.

## எம் பேரவையின் தேசிய அரசியற் குழு அறிக்கை

இக்குழு முரண்பாடுகள் அற்ற விதத்தில் தம் கருமத்தில் கண்ணாயுள்ளனர். இக்குழுவில் மாதர் உரிமைப் பிரிவும் அடங்கும். நாடெங்கிலும் இருந்து கன்பராவுக்குப் பல தடவை எம் பிரதிநிதிகள் சென்றனர். இக் குழுவினரின் முக்கிய செயற்பாடுகள் வருமாறு –

1. Tasmania தவிர்ந்த மற்ற ஐந்து மாநிலங்களிலும் அரசியற் செயற்குழுக்கள் அமைக்கப் பட்டன.

2. இக் குழுவினர் தத்தம் மாநிலங்களில் பல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் (நா.உ.), மேற்சபை உறுப்பினர்களையும் சந்தித்தனர். விபரங்கள் மாநில அவை அறிக்கைகளில் உண்டு.

3. திறனாய்வு, பகுப்பாய்வு, படைப்பு மூன்றையும் அடக்கிய குழு அமைக்கப் பட்டது. அரச நிர்வாகிகளுக்கு அனுப்பப் பட்ட பல முக்கிய கடிதங்கள் இவர்களால் எழுதப் பட்டவை. அரசியல் பரப்புரைக்கான துண்டுப் பிரசுரங்கள், கணணி மூலக் காட்சித் தொகுப்புக்கள் போன்றவையை உயர்ந்த ரகத்தில், தேவைக்கேற்பத் திறனாய்வு செய்து உருவாக்கல் இக் குழுவினரின் கடமை.

4. பாதுபாப்பு, வாணிபத் துறையின் ஆதரவில் புலம் பெயர்ந்த தமிழர்களின் நிலைப்பாட்டை அறிய என செப்டம்பர் மாதம் 14ம் திகதி நடாத்தப் பட்ட நிகழ்வில் எம் பேரவை உறுப்பினர்கள் மற்றைய தமிழ்க் குழு உறுப்பினர்களுடன் கலந்து கன்பராவில் மேதகு ஸ்டீவன் ஸ்மித்தைச் சந்தித்தனர். பாதுபாப்பு, வாணிபத் துறையினருடன் தொடர்ந்து தொடர்புகளைப் பேணி வருகிறோம்.

*Phone*: 1 300 660 629
*Email*: info@australiantamilcongress.com
*Web*: www.australiantamilcongress.com

ABN: 97 138 993 852

5. பிரித்தானியத் தூதுவராலயத்தின் ஆதரவில் புலம் பெயர்ந்த தமிழர்களின் நிலைப்பாட்டை அறிய என நவம்பர் மாதம் 7ம் திகதி கன்பராவில் உள்ள பிரித்தானியத் தூதுவரின் இல்லத்தில் நடாத்தப் பட்ட நிகழ்வில் எம் பேரவை உறுப்பினர்கள் மற்றைய தமிழ்க் குழு உறுப்பினர்களுடன் கலந்து பிரித்தானியப் பிரதமரின் விசேஷ தூதர் மேதகு டெஸ் பிரவுணைச் சந்தித்தனர்.

6. தமிழ் அகதிகள், உள் நாட்டில் இடம் பெயர்ந்தோர் பற்றிய எம் பேரவையின் நிலைப்பாட்டை விளக்கியும், **மூன்று லட்சம் பேருக்கு உங்களின் 30 விநாடிகள்** அரசியல் பரப்புரை பற்றியும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மேற்சபை உறுப்பினர்களுக்கும் கடிதங்கள் அனுப்பப் பட்டன. இவற்றைத் தொடர்ந்து அவர்களை நேரில் சந்தித்துப் பேச ஆவன மேற் கொள்ளப் படுகின்றன.

7. இலங்கையின் மனித உரிமை மீறல்கள் பற்றியும், அவற்றைப் பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் விவாதத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியதையும் வலியுறுத்திய, நன்கு திறனாய்வு செய்யப்பட்ட, தெளிவுற அறிவிக்கக் கூடிய ஆவணம், எம் விக்டோறிய மாநில அவையின் முக்கிய பங்களிப்புக்களுடன் தயாரிக்கப் பட்டது. இவ்வறிக்கை பொது நலவாய நாடுகளின் செயலாளர் நாயகத்துக்கும், எமது பிரதமர் கெவின் றட்டுக்கும், முக்கிய உயர் பதவிகளில் உள்ளவர்களுக்கும் அனுப்பப் பட்டது. **இலங்கையின் மனித உரிமை மீறல்கள் வருத்தத்துக்குரியன என்பதால் 2011ம் ஆண்டு மாநாடு அங்கே நடக்க மாட்டாது** என்ற அம் மாநாட்டின் தீர்மானத்தை வரவேற்ற கடிதம் எமது பிரதமருக்கு அனுப்பப் பட்டது.

8. எம் பேரவைக்கு Labour கட்சியின் தேசிய பாதுகாப்பு அரசியற் குழுவை நவம்பர் மாதம் 23ம் திகதி நாடாளுமன்ற வளாகத்தில் சந்திக்கும் அரிய வாய்ப்புக் கிட்டியது. அனைத்து நா.உ. க்களும் தமிழரின் பிரச்சினை பற்றி அறிந்து வைத்திருந்ததை அவர்கள் எழுப்பிய வினாக்களில் இருந்தும் குறிப்புரைகளில் இருந்தும் அறிய முடிந்தது. ஒடுக்கப் பட்ட தமிழினம் மீது அவர்களுக்குள்ள வருத்தத்தையும், கரிசனையையும், ஆதரவையும் அறிய முடிந்தது.

9. பேரவையின் மாதர் உரிமைப் பிரிவும் கன்பராவில் நா.உ. க்களையும், மேற்சபை உறுப்பினர்களையும், கொள்கை வகுப்பாளர்களையும் பலமுறை சந்தித்தனர். இச் சந்திப்புக்களில் சிறை முகாம்களிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் உள்ள தமிழ்ப் பெண்களினதும், குழந்தைகளினதும் அவல நிலை அவர்களுக்கு உணர்த்தப் பட்டது.

10. பேரவையின் மாதர் உரிமைப் பிரிவு, அகதிகள் குழுவினரின் ஒன்று கூடலில் கலந்து, அதில் உரையாற்றியவர்களுக்குப் பட்டாடை வழங்கினர். அந் நிகழ்வில் பேரவைக்கு

நன்றி தெரிவிக்கப் பட்டது. உரைகளில் பல தடவை பேரவை பற்றிக் குறிப்பிடவும் பட்டது.

11. பேரவையினரால் மனித உரிமைக் கருத்தரங்குகள் மெல்பேர்ன், பிறிஸ்பேன் நகர்களில் நடாத்தப் பட்டன.

12. பேரவையின் அடுத்த அரசியல் நடவடிக்கைகள், வழிவகைகள், உபாயங்கள் ஆகியவற்றை ஆராய்ந்த அரசியற் குழுவினரின் கூட்டம் டிசம்பர் மாதம் 12ம் திகதி மெல்போர்னில் நடைபெற்றது. இதில் ஐந்து மாநில அவைகளைச் சேர்ந்த 22 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இதன் தீர்மானங்கள் அனைத்து உறுப்பினர்களுடனும் வரும் காலங்களில் கலந்து ஆலோசிக்கப் படும்.

இலங்கைத் தமிழர்களின், சமத்துவத்துடன் கூடிய சுதந்திரத்தை வேண்டிய, போராட்ட வரலாற்றின் மிக முக்கிய ஆண்டாக 2009ம் ஆண்டை வரலாறு பதிவு செய்துள்ளது. அனைத்துத் தமிழர்களும் என்றும் எதிர் பார்த்திராத, கடுந் துயர்களையும், மரண வேதனைகளையும், தண்டனைகளையும்  அனுபவித்துள்ளனர். மலையளவு இழப்புடனும் உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்கள், அரங்கேறிக் கொண்டிருக்கும் மனித உரிமை மீறல்களையும் அத்துடன் பிணைந்துள்ள அரசியலையும் சமாளிக்கின்றனர். அவர்கள், பாராட்டும் அளவு வலி தாங்கும் உள்ளத்தையும், வளைந்து கொடுக்கும் தன்மையையும் கொண்டுள்ளனர்.

எமது போராட்டம் அனைத்துலக மயமாக்கப் பட்டது ஒன்றே, அண்மைய அண்மைய இராணுவப் போரில் மிஞ்சிய நன்மை. மென்மையானவையாய் இருந்தாலும் நிலைவழுவாது மேலை நாடுகளில் இருந்து கசியும் GSP+ வரிச் சலுகை, பொதுநலவாய நாடுகளின் அடுத்த மாநாடு நடாத்தப் படும் நாடு, போர்க் குற்றங்கள் நீதிமன்று ஏறும் வாய்ப்பு போன்ற செய்திகள் எமக்கு ஓரளவு சுகமளிக்கின்றன.  எதிர்பாராத மாற்றங்கள் நடக்கக் கூடிய இலங்கை அரசியல் நிலையும் முக்கியமான ஒன்றாக அமையலாம்.

இலங்கையில் வாழ்கின்ற அனைத்துத் தமிழருக்குமான நீதி, நியாயம், அமைதி, வளம் போன்றவை கிடைக்கச் செய்வதும், கிடைப்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதும் ஒவ்வொரு புலம் பெயர்ந்து வாழும் தமிழனினதும் தலையாய கடமை ஆகின்றது.

## குவீன்ஸ்லாந்து மாநில அவையின் ஆண்டிறுதி அறிக்கையின் சாரம்

1. ஆகஸ்ட் 16ம் திகதி உத்தியோக பூர்வமாக Sen. Mark Furner ஆல் தொடக்கி வைக்கப் பட்டது.

2. செப்டம்பர் 14ம் திகதி வெளிவிவகார அமைச்சர் மேதகு ஸ்டீவன் ஸ்மித்தைக் கன்பராவில் சந்திக்கப் பிரதிநிகள் சென்றனர்.
3. பல நா.உ.க்களையும் மேற்சபை உறுப்பினர்களையும் பிரதிநிதிகள் சந்தித்தனர். எம்முடன் Socialist Alliance உறுப்பினர்களும் இணைந்தனர்.
4. அக்டோபர் மாதம் 20ம் திகதி எம் பிரதிநிதி ALP Woolwin கிளைக் கூட்டத்தில் **அரசியல் அடைக்கலம் தேடுவோர்** என்ற தலைப்பில் உரையாற்றினார். தொடர்ந்து இது பற்றிய தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.
5. பலமுறை 612AM வானொலியில் எம் பிரதிநிதிகள் நேர்காணல்களில் பற்கேற்றனர்
6. நவம்பர் 7ம் திகதி பிரித்தானியாவின் இலங்கைக்கான விசேஷ தூதர் மேதகு Des Browne ஐக் கன்பராவில் சந்திக்கப் பிரதிநிகள் சென்றனர்.
7. ஐந்து வெவ்வேறு தேவாலயங்களில்எம் பிரதிநிதிகள் உரையாற்றினர்
8. Socialist Alliance உடன் உறவுகள் பேணப் படுகின்றன.
9. அனைத்துலக மன்னிப்புச் சபையுடன் உறவுகள் பேணப் படுகின்றன.
10. பிறிஸ்பேன் விமான நிலையத்தில் வந்திறங்கிய அகதிகள் வரவேற்கப் பட்டனர்.

## தென் அவுஸ்திரேலியா மாநில அவையின் ஆண்டிறுதி அறிக்கையின் சாரம்

1. ஆகஸ்ட் 15ம் திகதி உத்தியோக பூர்வமாகத் தொடங்கப் பட்டது.
2. புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல், நிதி சேர்த்தல், பேரவையின் நோக்கம் நிறைவாக்கல் ஆகிய மூன்றுக்கும் உபகுழுக்கள் அமைக்கப்பட்டன.
3. உறுப்பினர்களுக்கு என இரு வாரத்துக்கு ஒருமுறை செய்தி அறிக்கைகள் வெளியிடப் பட்டு வருகின்றன.
4. அரசியல் ஆதரவு தேடல் முயற்சியை இப்பொழுது Ceylon Tamil Association (CTA) உடன் இணைந்து எம் அவை முன்னின்று செயற்படுகின்றது.

5. இலங்கைத் தமிழர்கள் நிலை பற்றிய கருத்துப் பகிர்வை முன்வைத்து, அக்டோபர் 10ம் திகதி, பல்லினப் பண்பாட்டுக் கலை நிகழ்வு மாநிலச் சட்ட மன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் மிகச் சிறப்பாக நடாத்தப் பட்டது.
6. மற்றைய அகதிக் குழுக்களுடன் இணைந்து கிறிஸ்மஸ் தீவிலுள்ள அகதிகளுக்குத் தேவையான பொருட்கள் சேகரித்து அனுப்பியது.
7. தென் அவுஸ்திரேலிய அரசின் ஆதரவுடன் குடிபெயர்ந்த இலங்கைத் தமிழ் மக்களுக்கு அனைத்து விதத்திலும் உதவியது.
8. நா.உ.க்களுடனும், மேற்சபை உறுப்பினர்களுடனும் இணைந்த செயற் பாடுகள் நாடாளுமன்றத்தில் தமிழ் மக்கள் சார்பான தீர்மானங்களுக்கு ஆதாரமாக அமைந்ததன.
9. Socialist Alliance, CMFEU ஆகியவை நடாத்திய செயற்பாடுகளில் பங்குபற்றியது.
10. கன்பராவுக்குப் பலதடவை சென்று முக்கிய கூட்டங்களில் பங்கேற்றது.
11. அடிலைட் வானொலியில் நேர்காணல்களில் பங்கேற்றது.
12. ஐ.நா. அகதிகள் தூதுவராலயத்துடன் தொடர்புகளைப் பேணியது.

### மேற்கு அவுஸ்திரேலியா மாநில அவையின் ஆண்டிறுதி அறிக்கையின் சாரம்

1. மே 31ம் திகதி உத்யோக பூர்வமாகத் தொடங்கப் பட்டது.
2. செப்டம்பர் 29ம் திகதி Centre for Human Rights Education உடன் இணைந்து Curtain பல்கலைக் கழகத்தில் **இலங்கையில் மனித உரிமைகள் அழிவு** என்ற தலைப்பில் பகிரங்கக் கருத்தரங்கு ஒழுங்கு செய்தது.
3. அக்டோபர் 30ம் திகதி பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு முடிவுகாண வேண்டி Reclaim the Night Rally நிகழ்வில் கலந்தது.
4. டிசம்பர் 6ம் திகதி எம் அவை உறுப்பினர்கள் “EMILY’s List WA Pat Giles Lunch” ல் விசேஷப் பேச்சாளர்களாக அழைக்கப் பட்டமை.

5. டிசம்பர் 8ம் திகதி Coalition for Asylum seekers, Refugees and Detainees நடாத்திய கூட்டத்தில் பங்குபற்றியது.
6. எம் மாநில ஊடகங்களினால் பலமுறை நேர்காணல் காணப் பட்டமை.
7. மற்ற சமூக ஆர்வலர்கள் குழுக்கள் நடாத்திய பல பேரணிகளிலும், கருத்தமர்வுகளிலும் பங்கு பற்றியமையும், உரைகள் நிகழ்த்தியமையும்.
8. மாநில அவை உறுப்பினர்களுக்கு ஒழுங்காகச் செய்தித் தொகுப்புக்கள் அனுப்பியமை.
9. Socialist Alliance, WA உடன் தொடர்புகள் பேணப் பட்டமை.
10. மாநில நா.உ.க்களுடனும், மேற்சபை உறுப்பினர்களுடனும் தொடர்புகள் பேணப் பட்டமை.

### நியூ சவுத் வேல்ஸ் மாநில அவையின் ஆண்டிறுதி அறிக்கையின் சாரம்

1. ஆகஸ்ட் 15ம் திகதி உத்யோக பூர்வமாகத் தொடங்கப் பட்டது.
2. Socialist Alliance உடன் தொடர்புகள் பேணப் பட்டமை.
3. தேர்தல் தொகுதி வாரியாக நியமிக்கப் பட்ட இணைப்பாளர்களால் மாநில நா.உ.க்களுடனும், மேற்சபை உறுப்பினர்களுடனும் தொடர்புகள் பேணப் பட்டமை.
4. சட்டம், நீதி ஆகிய துறைகள் சார்ந்த வல்லுனர்களுக்கு இலங்கை அரசின் மனிதத்துக்கு எதிரான குற்றங்களுக்கு ஆதாரங்கள் உதவியமை.
5. மானியங்கள் பெறும் முயற்சியில் பேரவைக்கு இரண்டு அரச மானியங்களைப் பெற்றமை.
6. பேரவையின் அரசியல் துறைக்கு உதவும் முகமாக அகதிகள் நிகழ்வில் பங்கேற்றமை.
7. STARTTS குழுவுடன் இணைந்து கிறிஸ்மஸ் தீவிலுள்ள அகதிகளுக்குத் நவீனங்கள், சஞ்சிகைகள், சமய வழிபாட்டு நூல்கள் அனுப்பியமை.
8. விலாவுட் தடுப்பு முகாமுக்கு Refugee Support Group பினருடன் பலமுறை சென்று அங்கேயுள்ள தமிழ் அகதிகளுக்கு ஆங்கில-தமிழ் அகராதி உட்படப் பல பொருள்கள்

வழங்கியமையும், தொடர்புகளைப் பேணி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தமையும்.

9. எம் தொண்டர்கள் Migrant Resource Centre ன் தொண்டர் குழுவில் அங்கம் வகிப்பதும் மற்றைய சமூக சேவைக் குழுவினர்களுடன் தொடர்புகளைப் பேணுவதும்.

## விக்டோறிய மாநில அவையின் ஆண்டிறுதி அறிக்கையின் சாரம்

1. ஆகஸ்ட் 15ம் திகதி உத்யோக பூர்வமாகத் தொடங்கப் பட்டது.
2. நா.உ.க்களுடனும், மேற்சபை உறுப்பினர்களுடனும் தொடர்புகள் பேணப் பட்டமை.
3. பல பேரணிகளிலும், கருத்தமர்வுகளிலும் பங்கு பற்றியதும் உரைகள் நிகழ்த்தியமையும்.
4. தொழிற்சங்கங்களுடனும், Australian Council of Trade Unions உடனும், ஒழுங்கான செய்திப் பரிமாற்றங்கள் நடாத்தியமை.
5. அக்டோபர் மாதம் 24ம் திகதி Latin American and South East Asia Solidarity Group ஒழுங்கு செய்த கருத்தரங்கில் எம் உறுப்பினர்கள் கலந்து Human Rights and Civil Liberties in Sri Lanka என்ற தலைப்பில் உரையாற்றியமை.
6. நவம்பர் மாதம் 10ம் திகதி Monash பல்கலைக் கழகத்தில் மனித உரிமைகள் கருத்தரங்கு ஏற்பாடு செய்தமை.
7. நவம்பர் மாதம் 21ம் திகதி BRAG (Black Rights and Action Group) அமைப்பு ஒழுங்கு செய்த நிதி சேகரிக்கும் பணியில் பங்கேற்றமை.
8. டிசம்பர் மாதம் 1ம் திகதி Socialist Alliance ஏற்பாடு செய்த பொதுக் கூட்டத்தில் பங்கு பற்றியது.
9. டிசம்பர் மாதம் 2ம் திகதி Socialist Alternative ஏற்பாடு செய்த பொதுக் கூட்டத்தில் பங்கு பற்றியது.

10. டிசம்பர் மாதம் 10ம் திகதி BRAG உம், Alliance for Indegenous Self-Determination ஏற்பாடு செய்த பொதுக் கூட்டத்தில் பங்கு பற்றியது.

11. டிசம்பர் மாதம் 10ம் திகதி அனைத்துலக மனித உரிமைகள் தினத்தன்று Humaitarian Crisis Hub உடன் இணைந்து Human Rights: Whose business? என்ற கருத்தரங்கு ஏற்பாடு செய்தது.

12. பேரவையின் மனிதாபிமானச் செயற்பாடுகளை முன்னின்று நடாத்துவது.

### சமூகத் திட்டக் குழுவின் ஆண்டிறுதி அறிக்கையின் சாரம்

பேரவையின் தேசிய அரசியல் குழு, மக்கள் தொடர்பாடல் குழு, சமூகத் திட்டக் குழு ஆகியவற்றின் நெருங்கிய உறவுகளால் குடிவரவுத் திணைக்களத்தால் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப் பட்டுள்ள தமிழர்களைப் பார்வையிட அழைப்பு விடுவிக்கப் பட்டமையும் எம் பிரதிநிதி அங்கு சென்று எம்மவர்களைச் சந்தித்தமையும்.

### மக்கள் தொடர்பாடல் குழுவின் ஆண்டிறுதி அறிக்கையின் சாரம்

1. இலங்கைத் தமிழர் நிலையை எடுத்தியம்பும் ஏராளமான ஆவணங்ளையும், நா.உ.க்களுக்கும், மேற்சபை உறுப்பினர்களுக்கும், கொள்கை வகுப்பாளர்களுக்கும் இவை பற்றிய கடிதங்களையும் பேரவை எழுதியமை.

2. தேசிய அரசியல் குழுவினதும், மக்கள் தொடர்பாடல் குழுவினதும் அரசியல் ஆதரவு தேடும் முயற்சிகள் நா.உ.க்களும், மேற்சபை உறுப்பினர்களும் பல நாடாளுமன்ற மசோதாக்களுக்கு உதவியாக இருந்தமை.

   ⇒ வெளியுறவு அமைச்சர் மேதகு. ஸ்டீபன் ஸ்மித் நாடாளுமன்றில் ஆற்றிய உரை - 14-9-09

   ⇒ மேலவை உறுப்பினர் Bob Brown ன் அறிவித்தல் கொடுக்கப் பட்ட வினாவுக்கு மேலவை உறுப்பினர் Faulkner ன் பதில் - 16-10-09

   ⇒ அறிவித்தல் கொடுக்கப் படாத வினாவுக்கு வெளியுறவு அமைச்சர் மேதகு. ஸ்டீபன் ஸ்மித்தின் பதில் - 14-9-09

⇒ மேலவை உறுப்பினர் **Sarah Hansen-Young** ன் அறிவித்தல் கொடுக்கப் படாத வினாவுக்கு குடிவரவு அமைச்சர் மேதகு. Chris Evans ன் பதில் – 18-11-09

⇒ மேதகு. **Malcolm Turnbull** நா.உ. ரின் அறிவித்தல் கொடுக்கப் படாத வினாவுக்கு பிரதமர் மேதகு. **Kevin Rudd** ன் பதில் – 25-11-09

⇒ **ALP National Security Caucus Committee** யின் தலைவர் **Nick Champion** இலங்கை பற்றி கொண்டுவந்த மசோதா.

3. தக்க தருணங்களில் பேரவையின் ஊடக அறிவிப்புக்களும், ஊடக உறவுகளாலும் முன்னணி ஊடகங்களில் தாக்கம். பின்வரும் திகதிகளில் வெளியான பத்திரிகைச் செய்திகளின் பின்னணியில் நாம்.

⇒ **The Australian** ல் 24-10-09, 2-11-09, 16-11-09 வெளிவந்தவை

⇒ **The Daily Telegraph** ல் 17-10-09 வெளிவந்தது

⇒ **Herald-Sun** ல் 13-11-09 வெளிவந்தது

⇒ **Sydney Morning Herald** ல் 24-11-09 வெளிவந்தது

பின்வரும் திகதிகளில் வெளியான வான்வழிச் செய்திகளின் பின்னணியில் நாம்-

⇒ **ABC Local, National, News Radio** அலைவரிசைகளில் 1-9-09, 15-10-09, 16-10-09, 20-10-09, 23-10-09, 26-10-09, 3-11-09, 9-11-09, 12-11-09 ஆகிய நாட்களில் பல வெவ்வேறு தலைப்புக்களில் நடந்த நேர்காணல்கள், செய்திகள் மாநிலத் தலை நகர்களுக்கும், மற்ற முக்கிய நகர்களுக்கும், முழு நாட்டுக்கும் நடந்த ஒலி பரப்புக்கள்.

⇒ **SBS 6.30pm TV World News** ல் 6-10-09, 15-10-09, 23-10-09 ஒளி பரப்புக்கள்.

⇒ **2UE Sydney, Triple J Sydney, Triple J Melbourne, 2CC Canberra, 2SM Sydney** அலைவரிசைகளில் 13-10-09, 15-10-09, 17-10-09, 22-10-09, 23-10-09 ஆகிய நாட்களில் மாநிலத் தலைநகர்களுக்கும், முக்கிய நகர்களுக்கும் பல

வெவ்வேறு தலைப்புக்களில் நடந்த நேர்காணல்கள், செய்திகளின் ஒலி பரப்புக்கள்.

4. பேரவை **மூன்று லட்சம் காரணங்கள்** என்ற அரசியல் பரப்புரையை ஆகஸ்ட் மாதத் தொடக்கத்தில் முன்னெடுத்தது. தமிழ் அகதிகள், உள் நாட்டில் இடம் பெயர்ந்தோர், இலங்கைச் சிறை முகாம்களில் வாடுபவர் அனைவருக்கும் எம் பேரவையின் ஆதரவை விளக்கியும், அவுஸ்திரேலிய மக்களினதும் அரசினதும் ஆதரவைக் கோரியும் இப் பரப்புரை தொடங்கப்பட்டது. Viral marketing campaign comprising of a website and online petition (300000.com.au), email distribution database, a Facebook cause page, Facebook bulletins delivered to members ஆகிய கணணி வழிமுறைகளுடன் தபாலட்டை விநியோகித்துக் கையொப்பம் பெறல் வரை கையாளப் பட்டன. டிசம்பர் மாத நடுப்பகுதியில் 2500 மின்னஞ்சல்கள் பிரதமர் Kevin Rudd க்கு அனுப்பப் பட்டும், மின்னஞ்சல்கள் அனுப்பியவர்களின் நா.உ.க்களுக்கு அனுப்பப் பட்டும், நா.உ.க்கள் மூலம் 1500 கையொப்பம் பெற்ற தபாலட்டைகள் பிரதமருக்குக் கையளிக்கப் பட்டும் இருந்தன. 1500 பேருக்கு மேல் Facebook குழுவில் உள்ளனர். இப் பரப்புரை பற்றிப் பல திசைகளிலிருந்தும் பாராட்டுக்கள் வந்துள்ளன. பாராட்டியவர்களுள் கட்சி சார்பற்று நா.உ.க்கள், மனித உரிமை ஆர்வலர்கள், பரப்புரைத் தொழில் சார்ந்த வித்தகர்கள் போன்றோர் அடங்குவர். Trinidad and Tobago வில் நடந்த பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் கூட்டத்தில் இலங்கையின் மனித உரிமை பற்றி விவாதிக்க அவுஸ்திரேலிய அரசு முன் வந்தமைக்கு எமது பரப்புரை முக்கிய காரணமென நாம் நம்புகிறோம்.

---

பிற் குறிப்பு-

1. இடங்கள், ஆட்கள், குழுக்கள் ஆகியவற்றின் பெயர்கள் வாசிப்பவர்கள் தடங்கல் ஏதுமின்றி வாசித்து விளங்கக் கூடிய வகையில் ஆங்கிலத்திலேயே தரப்பட்டுள்ளன.
2. மாதங்களும் Gregorian மாதங்களாவே குறிப்பிடப் பட்டுள்ளன. உதாரணமாக தமிழ்த் தை மாதம் ஜனவரியின் காலத்தைக் குறிக்க மாட்டா. திகதிகளும் அப்படியே.
3. கிரந்த எழுத்துக்கள் உபயோகிக்கப் படுகின்றன. ஆறுமுக நாவலரையும் சுப்பிரமணிய பாரதியையும் மதிக்கிறோம்.

# Australian Tamil Congress

## A Unified Voice for All Tamils

*Phone*: 1 300 660 629
*Email*: info@australiantamilcongress.com
*Web*: www.australiantamilcongress.com

ABN: 97 138 993 852